DEPOSITION OF WITNESS
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.
CC.No.208/2023
Prosecution witness – P.W.3

| | | |
|---|---|---|
| Name | : திரு.ராமமூர்த்தி | Caste: |
| Father's Name | : | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

(Accused present)
**25.05.2026- 03.03 PM**
<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது கமுதி காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் இறுதி கட்ட விசாரணை மேற்கொண்டு இறுதி அறிக்கை தாக்கல் செய்த கமுதி காவல் நிலையித்தில் பணியாற்றிய சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.ராமசந்திரன் மற்றும் சார்பு ஆய்வாளர் திரு.பிரகாஷ் என்பவர் தற்போது பணிமாறுதலாகி சென்றுவிட்டார்.

2. சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.இராமசந்திரன் என்பவர் கடந்த 13.03.2023 ம் தேதியன்று 03.00 மணிக்கு கமுதி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு சிகிச்சையில் இருந்த அ.சா.1 கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று நிலையக் குற்ற எண்.68/2023 இ.த.ச. பிரிவுகள் 294(b), 324, 506(2)–ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். அந்த **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. பின்னர் இவ்வழக்கை தனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட சார்பு ஆய்வாளர் அன்றைய தினமே 09.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ராஜலிங்கம் மற்றும் கண்ணன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அந்த **பார்வை மகஜர் அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சாட்சிகள் இருவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் சம்பவ சாட்சிகளான பட்டியல் சாட்சிகளான 1 முதல் 6 சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் எதிரியை தேடிவந்த நிலையில் எதிரி முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரத்தில்

முன்பிணை பெற்றபடியால் கைது நடவடிக்கை மேற்கொள்வில்லை.

4. பின்னர் 28.03.2023ம் தேதி இவ்வழக்கில் காயம்பட்ட அ.சா.1க்கு சிகிச்சை அளித்த கமுதி அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.பிரபாகரன் என்பவரை விசாரித்து காயச்சான்று பெற்றுள்ளார். அ.சா.1க்கு ஏற்பட்ட காயம் சிறுகாயம் என மருத்துவர் சான்று வழங்கியுள்ளார். அ.சா.1க்கு **கமுதி அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்ட காயச்சான்றுடன் கூடிய விபத்துப்பதிவேடு அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் அத்துடன் வழக்கின் விசாரணையை முடித்து அன்றே எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 324, 506(2)-ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-

1. நான் சொல்வது போல் புலன் விசாரணை அதிகாரி புகார் மனு பெறவில்லை என்றாலும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றாலும் சரியல்ல. புலன் விசாரணை அதிகாரி சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றும் சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

2. அ.சா.1 அளித்த பொய்யான புகார் மனுவைப் பெற்று சம்பவ இடம் செல்லாமல் சாட்சிகளை விசாரிக்காமல் காவல்நிலையத்தில் வைத்து வழக்கிற்கு ஏற்றார் போல் ஆவணங்கள் தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.05.25 18:41:50 +0530